44

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

ஆண்டறிக்கை

1994-95

தமிழ்நாடு அரசு அச்சுத்துறை இயக்குநரால் தமிழ்நாடு அரசுக்காக பதிப்பிக்கப்பெற்றது

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஆண்டறிக்கை 1994-95

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ஆண்டறிக்கை 1994-95

பொருளடக்கம்

வரிசை எண்.	பொருள்.	பக்கம்.
(1)	(2)	(3)
1.	செயல்களும் கடமைகளும்.	1-3
2.	நேரடித் தேர்வுகள்.	4-5
3.	தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை.	6
4.	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் ஒழுங்கு நடவடிக்கை; முறையீடுகள் மனுக்கள், சட்டமுறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன.	7-9
5.	தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள்.	9
6.	சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்.	16-19
7.	அரசும் தேர்வாணையமும்.	19-21

பின் இணைப்புகள்

1.	தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்.	22
2.	நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம்.	23
3.	வருவாய் மற்றும் செலவு.	25
4.	வெளியான அறிவிக்கை விளம்பரங்கள்.	26-29
5.	எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு விவரம்.	30-34
6.	பொருத்தமும் தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம்.	35
7.	பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள்.	36-38
8.	ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம்.	39
9.	தேர்வாணையத்தின் ஒழுங்கு முறை விதி 1954 விதி 16(பி) பிற்பகுதியின்கீழ் நியமனங்கள், முறைப்படுத்தியதன் விவரம்.	40-42
10.	தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி-சார்நிலைப் பணி அமைச்சுப் பணிகள் 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம்.	43-45
11.	அரசுத் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாதவை குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம்.	46

ஆண்டறிக்கை 1994-95 ஆம் ஆண்டு

முன்னுரை :- *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசியலமைப்பு பிரிவு* 315-*இனபடி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், உறுப்பினர்கள்*-11 *என்பது ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும்.*

இவ்வாண்டிற்கான தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

திரு. சூ.ர. கருப்பண்ணன், இ.ஆ.ப. (ஓய்வு).	..	*தலைவர்*
திரு. ஜெ. இராமலிங்கம், பி.இ. (10-4-94 *பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்).*	..	*உறுப்பினர்*
திரு. சா. அமீது, எம்.ஏ.	..	*உறுப்பினர்*
திரு. ஜி. செல்வகணபதி, எம்.ஏ.	..	*உறுப்பினர்*
திருமதி கோ. நாயகம், எம்.ஏ., எம்.பில்..	..	*உறுப்பினர்*
டாக்டர் எம். எஸ். இராமச்சந்திரன், எம்.பி.பி.எஸ்., எம்.டி., (மருத்துவம்).	..	*உறுப்பினர்*
திரு. சி. செல்லப்பன், இ.ஆ.ப. (ஓய்வு).	..	*உறுப்பினர்*

திரு. ஏ. தசரதன், இ.ஆ.ப, செயலாளராக பணியில் தொடர்ந்து இருக்கின்றார்.

திரு. பிரவின் குமார், இ.ஆ.ப. தேர்வுக் கட்டுப்பாடு அலுவலராக பணியில் தொடர்ந்து இருக்கின்றார்.

மார்ச் 31, 1995-*ன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு*-1*இல் கொடுக்கப்பட்டுள்ளது.*

பகுதி-1

செயல்களும், கடமைகளும் :—தேர்வாணயம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்பு பிரிவு 320-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணயம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளருக்கு பணிக் காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான நஷ்ட ஈடு வழங்குதலில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினை கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும்.

வேலை பளு—:-அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப் பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

நேரடித் தேர்வு :-

(1) *முதல் நிலைத் தேர்வு :—*

தேர்வுகளின் எண்ணிக்கை .	..	4
காலியிடங்களின் எண்ணிக்கை.	..	145
பெறப்பட்ட விண்ணப்பங்கள்.	..	9958
பரிந்துரை செய்யப்பட்டவர்கள்.	..	1450

(2) *இறுதி நிலை எழுத்துத் தேர்வு :-*

தேர்வுகளின் எண்ணிக்கை.	..	51
காலியிடங்களின் எண்ணிக்கை.	..	3274
பெறப்பட்ட விண்ணப்பஙகள்.	..	36745
பரிந்துரை செய்யப்பட்டவர்கள்.	..	4302

(3) *நேர்முகத் தேர்வு :-*

தேர்வுகளின் எண்ணிக்கை.	..	30
காலியிடங்களின் எண்ணிக்கை.	..	289
தேர்வுகளில் கலந்து கொண்டவர்கள்.	..	1309
பரிந்துரை செய்யப்பட்டவர்கள்	..	275

(4) *இறுதி நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் :-*

தெரிவு முடிவு செய்த பதவிகளின் எண்ணிக்கை.	..	27
காலியிடங்க்ளின் எண்ணிக்கை.	..	3508
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை.	..	4,43,330
முதல் நிலைத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்.	..	3,92,337
இறுதி நிலை எழுத்துத் தேர்வில் கலந்து கொண்டவர்கள்.	..	34,531
வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்.	..	904
தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை (தொகுதி நான்கு மற்றும் தொகுதி ஐந்து பணியும் சேர்ந்து).	..	3,435

2. இதர பணி விவரங்கள் :—

	1994 மே	1994 நவம்பர்
(1) துறைத் தேர்வு :-		
விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை.	51,710	42,174
வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை.	17,007	13,792
(2) அரையாண்டுத் தேர்வு :-		
1994 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை.	44	..
1995 ஆம் ஆண்டு மார்ச் தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை.	41	..
(3) கல்வித் தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது.	76 நேர்வுகள்	..
(4) பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல்.	3252 நபர்கள்	..
(5) ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல்.	149 நபர்கள்	..
(6) ஒழுங்கு நடவடிக்கை :-		
தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள்.	638 நேர்வுகள்	..
(7) ஒழுங்கு முறை விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்தவை.	2981 நேர்வுகள்	..
(8) வரவு மற்றும் செலவு	(ரூபாய் ஆயிரங்களில்.)	
வரவு	40,49	
செலவு	3,83,99	

வரவு செலவு விவரங்கள் பின் இணைப்பு 3-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

(9) அறிவிக்கைகள் :—

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 71 பதவிகளுக்கான 712 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 26 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிடப்பட்ட 71 பதவிகளுக்கான அறிவிக்கை பட்டியல் காலியிடங்களின் எண்ணிக்கையுடன் பின் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(10) சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள் :—

மற்ற ஒத்த பணியமைப்பு உடைய நிறுவனங்களில் ஏற்படும் முன்னேற்றங்களையும், தேர்வு முறைகளில் ஏற்படும் மாற்றங்களையும் இத்தேர்வாணையம் அவ்வப்பொழுது ஆராய்ந்து தனது தெரிவு முறைகளில் உரிய மாற்றங்களை செய்து வருகின்றது.

பகுதி-2

நேரடித் தெரிவுகள் :— அறிக்கைக்குரிய ஆண்டில் 145 காலியிடங்களுக்கான 4 தெரிவுகளுக்கு முதல் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டது 9,958 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர் 3,274 காலியிடங்களுக்கான 51 தெரிவிற்கு இறுதி நிலை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டது. 36,745 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர், 289 காலியிடங்கள் அடங்கிய 30 தெரிவிற்கு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது 1309 விண்ணப்பத்தாரர்கள் அனுமதிக்கப்பட்டனர். தேர்வாணையம் இறுதியாக 400 விண்ணப்பதாரர்களை இறுதி நிலை மற்றும் வாய்மொழி தேர்வின் மூலம் தெரிவு செய்தது. 3,435 விண்ணப்பதாரர்களை இறுதியாக தெரிவு செய்தது. 27 தெரிவுகளின் புள்ளி விவரம் பின் இணைப்பு-2இல் கொடுக்கப்பட்டுள்ளது.

நுட்பம் சார் பணிகளில் முக்கிய பதவிகளின் தெரிவு விவரம்.

வரிசை எண்ணும் பதவியின் பெயரும்.	காலியிடங்களின் எண்ணிக்கை.	தெரிவு செய்த நபர்கள்.
(1)	(2)	(3)
1. தொகுதி ஒன்று பணிகள்	29	29
2. சிறார் மேம்பாட்டு திட்ட அலுவலர்	18	18
3. வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்)	23	23
4. உதவி புள்ளியியல் ஆய்வாளர், புள்ளியியல் துறை	85	85
5. புள்ளியியல் உதவியாளர், பொதுச் சுகாதாரம்	17	17
6. இயக்கூர்தி ஆய்வாளர், நிலை-2	19	17
7. தொகுதி நான்கு பணிகள் (இளநிலை உதவியாளர்/தட்டச்சர்)	2700	2715
8. தொகுதி நான்கு பணிகள் (சுருக்கெழுத்தர்/நேர்முக எழுத்தர்)	402	351
9. உதவிப் பொறியாளர் (சிவில்) நெ.சா மற்றும் ஊ.ப.துறை	20	20
10. மக்கள் நல அலுவலர்	25	25
11. வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) மகளிர்	75	75

தொகுதிப் பணிகள் :—

தொகுதி ஒன்று பணிகள் :- தேர்வாணையம் தொகுதி ஒன்று பணிக்கு 15-6-1992 அன்று விளம்பரப்படுத்தியது. 32,879 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 3-10-1992 அன்று நடைபெற்றது. முதல் நிலைத் தேர்வின் அடிப்படையில் இறுதி நிலை எழுத்துத் தேர்விற்கு 300 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 26-3-1993 முதல் 31-3-1993 வரை நடந்தது. 5-4-94 முதல் 8-4-94 வரை நேர்முக தேர்வு நடத்தப்பட்டது. இறுதியாக 29 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தொகுதி இரண்டுப் பணிகள் :—

தேர்வாணையம் தொகுதி இரண்டு பணியில் 396 காலியிடங்களை நிரப்ப 6-4-1993 அன்று விளம்பரப்படுத்தியது. 57,866 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 8-1-1994 அன்று நடைபெற்றது. முதல் நிலைத் தேர்வின் அடிப்படையில் இறுதி நிலை எழுத்துத் தேர்விற்கு 3,170 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 29-8-94 முதல் 31-8-94 வரை நடத்தப்பட்டது. இறுதி நிலை எழுத்துத் தேர்வின் முடிவுகள் 1995 மே திங்களில் வெளியிடப்பட்டது.

தொகுதி மூன்று பணிகள் :-

தேர்வாணையம் தொகுதி மூன்று பணிக்கு 6-4-1993 அன்று விளம்பரப்படுத்தியது. 49,171 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத தேர்வு 9-1-1994 அன்று நடைபெற்றது. முதல் நிலைத் தேர்வின் அடிப்படையில் இறுதி நிலை எழுத்துத் தேர்விற்கு 380 விண்ணப்பத்தாரர்கள் அனுமதிக்கப்பட்டனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 26-8-94 முதல் 28-8-94 வரை நடத்தப்பட்டது. இறுதி நிலை தேர்வின் அடிப்படையில் 124 விண்ணபதாரர்கள் வாய்மொழித் தேர்விறகு அனுமதிக்கப்பட்டனர். வாய்மொழித் தேர்வு ஏப்ரல் திங்களில் நடத்தப்பட்டது.

தொகுதி நான்கு பணிகள் :-

தேர்வாணையம் தொகுதி நான்கு பணிகளில் 2,700 காலியிடங்களை நிரப்ப 6-2-1993 அன்று விளம்பரப்படுத்தியது. 3,63,382 விண்ணப்பங்கள் பெறப்பட்டது முதல் நிலைத் தேர்வு 18-7-1993 அன்று நடந்தது. முதல நிலைத் தேர்வின் அடிப்படையில் 27,000 விண்ணபதாரர்கள் இறுதி நிலைத தேர்விற்கு அனுமதிக்கப்படடனர். 23-4-94 அன்று 38 மையங்களில் இறுதி நிலை தேர்வு நடைப்பெற்றது. இறுதி நிலைத் தேர்வின் அடிப்படையில் 2,715 நபர்கள் தெரிவு செயயப்பட்டனர்.

தேர்வாணையம் தொகுதி நான்கு பணியில் சுருக்கெழுத்து தட்டச்சர்/நேர்முக உதவியாளர் பதவிகளில் 453 காலியிடங்களுக்கு விளம்பரப்படுத்தியது. 1,933 விண்ணபதாரர்கள் இறுதி நிலைத் தேர்விற்கு அனுமதிக்கப்படடனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 23-1-1994 அன்று நடைபெற்றது இறுதி நிலை தேர்வின் அடிப்படையில் 351 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்

தொகுதி ஐந்து பணிகள் :—

தேர்வாணையம் தொகுதி ஐந்து பணிகளில் 11 காலியிடங்களை நிரப்ப 22-2-1993 அன்று விளம்பரப்படுததியது 2,400 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 3-10-1993 அன்று நடைபெற்றது. முதல் நிலைத் தேர்வின் அடிப்படையில் 118 விண்ணபதாரர்கள் இறுதி எழுத்துத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 30-4-1994 முதல் 2-5-1994 வரை நடந்தது. இறுதி நிலைத் தேர்வின் அடிப்படையில் 11 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தொகுதி ஏழு பணிகள் :—

தேர்வாணையம தொகுதி ஏழு பணிகளில் 6 காலியிடஙகளுக்குகான அறிக்கை 27-12-1992 அன்று விளம்பரப்படுத்தியது. 6,293 விண்ணப்பஙகள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 4-4-1993 அனறு நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால நிறுததி வைப்பு ஆணைக்கிணஙக மற்ற தேர்வு வேலைகளும் நிறுததி வைக்கப்படடன. உயர்நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி இறுதி நிலைத தேர்வுகள் விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுளளது.

தொகுதி எட்டு பணிகள் :-

தேர்வாணையம் தொகுதி எட்டு பணிகளில் 24 காலியிடங்களுக்கு 27-12-1992 அன்று விளம்பரப்படுத்தியது. 11,916 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 27-6-1993 அன்று நடைபெற்றது. சென்னை உயர்நீதிமன்றத்தின் நிறுத்தி வைப்பு ஆணைக்கிணஙக மற்ற தேர்வு வேலைகளும் நிறுத்தி வைக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின்படி இறுதி நிலைத் தெரிவுகள் விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் நிலைத் தேர்வுகள் :— அறிக்கைக்குரிய ஆண்டில் 4 வகைப் பணிகளில் 145 காலியிடங்களை நிரப்ப 4 முதல் நிலைத் தேர்வுகள் நடத்தப்பட்டன. 9,958 விண்ணபதாரர்கள் முதல் நிலைத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இறுதி நிலை எழுத்துத் தேர்வுகள் :— அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 3,274 காலியிடங்களை நிரப்புவதற்கு 51 இறுதி நிலை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 36,745 விண்ணபபத்தாராகள் அனுமதிக்கப்பட்டனர்.

வாய்மொழித் தேர்வு :— அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 289 காலியிடங்களை நிரப்ப வாய்மொழித் தேர்வு நடந்தது. நடப்பு ஆண்டில் வழக்கமான அலுவல் பணி கூட்டங்களோடு 58 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகள் நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் காலை மற்றும் மாலை என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. அதிகபட்சமாக 2 குழுமங்கள் இயங்கின. மொத்தம் 107 கூட்டத் தொடர்கள் நடந்தன. 1,309 விண்ணப்பத்தாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

1994-95 ஆம் ஆண்டில் நடந்த முதல் நிலை, இறுதிநிலை எழுத்துத் தேர்வுகள் மற்றும் வாய்மொழித் தேர்வுகளின் விவரங்கள் பின் இணைப்பு 5-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி-3

தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை :

அறிக்கைகுரிய ஆண்டில் மாவட்ட குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிபதி-14 மற்றும் சுருக்கெழுத்து தடடசர்-53 ஆகிய 67 காலியிடங்களுக்கு தகுதியும் பொருத்தமும் உடைய வேடபாளர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பபபடவில்லை.

(1)	ஆதி/பழ (2)	மி.பி வ. (3)	பி.வ. (4)	ப.போ. (5)	மொத்தம் (6)
1. மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி.	3	3	4	4	14
1. சுருக்கெழுத்தர்/தட்டச்சர்	53	..	..	..	53
மொத்தம்	**56**	**3**	**4**	**4**	**67**

இதன் விவரம் பின இணைப்பு 6இல் கொடுக்கப்பட்டுள்ளது.

பகுதி-4

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :-

ஏப்ரல் 1, 1994 முதல் மார்ச் 31, 1995 வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார்நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்து குறிப்பீடுகளை ஆய்வு செய்தது அவ்வகையில் 29 மாநிலப் பணிகளில் 3,252 தகுதியும் பொருத்தமும் முடைய நபர்களை தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு-7ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன :-

(1)	செயல் நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 1994இல் நிலுவையில் இருந்த 46 வழக்குகள் உட்பட).	713
(2)	அ. தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள்.	638
	ஆ. தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள்.	21
	இ. உரிய நடைமுறைகளை பின்பற்றி அனுப்புமாறு அரசுக்கு திருப்பியது.	34
	ஈ. சில ஆவணங்கள் அல்லது விவரங்களை அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள்.	20
3.	வழஙகப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள்.	38
	(அ) அரசுக்கு தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள்.	409
	(ஆ) அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணை பிறப்பித்த வழக்குகள்.	240
	(இ) அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள்.	169
4.	ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் கால செலவழிவு :	
	(அ) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை.	240

	மாதம்	நாட்கள்
(ஆ) குற்றச்சாட்டுக் குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக் கோரி அரசு நிலையான கடிதம் அனுப்பிய நாள் வரை எடுத்துக் கொள்ளப்பட்ட சராசரி நேரம்.	12	18
(இ) தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக்கொண்ட சராசரி நேரம்.	2	23
(ஈ) தேர்வாணையம் தனது கருத்தினை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரி நேரம்.	5	6
எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நேரம் சராசரி	20	17

மேல்முறையீடு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை, ஓய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு, இவைகளில் அலுவலர்களை தமது நேர்மைக்கு புறம்பாக நடந்துகொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் கொண்ட வழக்குகள் என 409 வழக்குகளின் விவரம் பின் இணைப்பு-8இல் கொடுக்கப்பட்டுள்ளன.

3. சட்ட முறை, ஒழுங்கு முறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகள் 1954-இல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 2981 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. 10 நிகழ்வுகளில தோவாணையம தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

வரிசை எண் மற்றும பணி வகை. (1)	இசைவு அளிக்கப் பட்டவை. (2)	இசைவு மறுக்கப் பட்டவை. (3)
1. மாநிலப் பணி	1878	..
2. சார்நிலைப் பணி	25	4
3. அமைச்சுப் பணி	1078	6
கூடுதல்	**2981**	**10**

எப்பணிகளில எந்தெந்த பதவிகளுககு இசைவு அளிக்கப்பட்டது, அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு-9ல் கொடுக்கபபட்டது.

4. தற்காலிக நியமனங்கள் :

கீழே குறிப்பிடடுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 762 நபர்களை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் 24 மாதங்கள் வரை தொடர்வதற்கு தேர்வைணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது 118 நபர்களுக்கு தற்காலிக நியமனம் தொடர இசைவு மறுக்கப்பட்டது. 353 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கு மேல் தொடர அனுமதிக்கப்பட்டது. 56 நபர்களின் நியமனம் 24 மாதங்களுக்கு மேல் தொடர இசைவு மறுக்கப்படடது

காலம்	இசைவு அளிக்கப்பட்டது.		இசைவு மறுககப்படடது.	
	மாநிலப் பணிகள்	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்.	மாநிலப் பணிகள்.	சார்நிலை/ அமைச்சுப் பணிகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
3 மாதஙகளுக்கு மேல் 12 மாதங்களுக்குள்	95	..	51	..
12 மாதங்களுக்கு மேல் 18 மாதஙகளுக்குள்	41	12	66	..
18 மாதஙகளுக்கு மேல் 24 மாதங்களுக்குள்	605	9	1	..
24 மாதஙகளுக்கு மேல்	314	39	56	..
கூடுதல்	**1055**	**60**	**174**	..

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடர தேர்வாணையம் 353 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரங்கள் பின் இணைப்பு 10இல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. விதி 20(ஏ) (3)-ன்படி இசைவு அளிக்கப்பட்டவை :—

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20(ஏ) (3)-ன்படி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை 149 ஆகும். மற்றும் 16 நேர்வுகளில் இசைவு மறுக்கப்பட்டது.

6. விதிகள்—பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல் :-

அரசால் 153 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அலலது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 126 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 27 நேர்வுகளில தேர்வாணையத்தின் கருத்து கேடடறியப்படவில்லை. அவை தேர்வாணைய உள்ளீட்டெல்லைகளுக்கு உட்படாதவையாகவோ, அல்லது இந்திய அரசியலைப்புச் சட்ட பிரிவுககூறு 320 (3)ன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல் :-

அறிக்கைக்குரிய ஆண்டில் 76 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்டமுறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டது. 6 நேர்வில் ஓய்வூதிய விதிகளைத் தளாத்தியுள்ளது. அடிப்படை விதிகள் தமிழ்நாடு சிறப்பு ஊதிய படி விதிகள மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் எந்த நேர்வுகளும் விதிகளைத் தளர்த்தி ஆணையிடவில்லை. மேலும் எந்த நேர்விலும் மதராஸ் பொது வருங்கால வைப்பு நிதிகளைத் தளர்த்தி ஆணையிடவில்லை.

பகுதி-5

தெரிவுத் தேர்வுகள் தவிர இதர தேர்வுகள் :

(அ) துறைத் தேர்வுகள் :

1994 ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றது. 251 தேர்வுகள் நடத்தப்பட்டது. 93,884 நபர்கள் விண்ணப்பித்தனர். இதன் விவரம் :-

		1994 துறைத் தேர்வு.	
		மே	நவம்பர்
	(1)	(2)	(3)
1.	மொத்த பாடங்கள்	127	120
2.	தேர்வுத் தாள்களின் எண்ணிக்கை	129	122
3.	விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை	51,710	42,174
4.	மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள்	38,536	31,364
5.	தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை	17,007	13,792
6.	தேர்ச்சி சதவீதம்	44	44

(ஆ) அரையாண்டுத் தேர்வுகள் :—

மாவட்ட உதவி ஆட்சியாளர், துணை ஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வுகள் செப்டம்பர் 1994 மற்றும் மார்ச் 1995இல் நடந்தன இவற்றில் முறையே 44 மற்றும் 41 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(இ) சிறப்புத் தமிழ்த் தேர்வு :— தமிழை தாய்மொழியாகப் பெறாத அகில இந்தியப் பணியைச் சார்ந்த அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ்த் தேர்வு செப்டம்பர் 1994இல் விளம்பரப்படுத்தப்பட்டதற்கு ஒருவரும் விண்ணப்பிக்கவில்லை.

(ஈ) டேராடூன் இந்திய பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளிகளில் சேருவதற்கான தேர்வு :—

டேராடூனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளிகளில் சேருவதற்காக இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்ட் 1994 மற்றும் பிப்ரவரி 1995இல் தேர்வினை நடத்தியது. அதற்கு 143 மற்றும் 103 மாணவர்கள் விண்ணப்பித்தனர். அவர்களில் ஆகஸ்ட் தேர்வில் இரண்டு பேர் தெரிவு பெற்றனர். பிப்ரவரி 1995 தேர்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகளின் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட வாய் மொழித் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விவரம்



கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலமாக பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விவரம்



பகுதி-6

சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்.

1. தொகுதி ஒன்று பணிகளுக்கான தேர்வினை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய தேர்வு முறையில் நடத்துதல்.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமுறைப் அரசுப்பணி தேர்வுகளில் தமிழகத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் கணிசமான அளவில் தேர்வு பெறவில்லை என்பது தற்போதுள்ள பொதுவான உணர்வாகும். இத்தேர்வுகளில் தமிழக மாணவர்களின் பங்கு உயர வேண்டுமெனில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி ஒன்று பணித்தேர்வின் தேர்வுமுறை மற்றும் பாடத்திட்டம், வயது மற்றும் கல்வித்தகுதிகள் ஆகியவற்றை மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் நிர்ணயித்துள்ளவாறு மாற்றியமைக்கலாம் என தேர்வாணையம் முடிவெடுத்து அதற்கான கருத்துருவினை 3-4-1992 அன்று அரசுக்கு அனுப்பி வைத்தது. அரசு அதனை ஏற்று 23-1-1995-ல் உரிய ஆணை வழங்கியுள்ளது (அ.ஆ. எண். 25, நிர்வாகம் மற்றும் பணியாளர் சீரமைப்புத்துறை, நாள் 23-1-1995.)

எனவே, இனி நடைபெறும் தொகுதி ஒன்று பணித்தேர்வுகள் (முதன்மை மற்றும் இறுதிநிலைத் தேர்வுகள்) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமுறை அரசுப்பணி தேர்வுகளைப் (முதன்மை மற்றும் இறுதிநிலைத் தேர்வு) போன்றே நடைபெறும். இதனால் தொகுதி ஒன்று பணித்தேர்வு மற்றும் குடிமுறைப் அரசுப்பணித்தேர்வு ஆகிய இரண்டு தேர்வுகளுக்கும் விண்ணப்பிக்கும் பணி வேட்பாளர்கள் ஒரு குறிப்பிட்ட பாடங்களை தேர்வு செய்து இரண்டு தேர்வுகளுக்கும் ஏற்புடைய முறையில் விண்ணப்பதாரர்கள் தயார் ஆகலாம்.

2. தமிழ் மொழியை கட்டாயப் பாடமாகச் சேர்த்தல்:

மாவட்ட அளவிலான நிர்வாகங்களின் தமிழ் ஆட்சிமொழியாக பயன்படுத்துவதை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தான் நடத்தும் போட்டித் தேர்வுகளில் மொழிப்பாடம் ஒன்றினை கட்டாய தாளாக சேர்க்க முடிவு செய்தது. அதாவது பள்ளியிறுதி வகுப்பு கல்வி நிலையில் "பொதுத் தமிழ்" அல்லது "பொது ஆங்கிலம்" என்ற தாளினை அனைத்து போட்டித்தேர்வுகளிலும் கட்டாயப் பாடமாக்கி அரசுக்கு 27-7-1993 அன்று கருத்துக்கு அனுப்பியது. அரசிடமிருந்து உரிய ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. (அரசு கடித எண். 59630, நிர்வாகம் மற்றும் பணியாளர் சீர்திருத்தத்துறை, நாள் 20-4-1995.)

3. துறை பதவி உயர்வுக் குழுக்கள்:

அரசுத்துறைகளில் பணிமாற்றம் மூலம் பதவி உயர்வு வழங்கிட தகுதியுடைய பணியாளர்களை மதிப்பீடு செய்வதற்காகவும் பதவி உயர்வு வழங்குவதில் ஏற்படும் காலவிரயத்தைக் குறைக்கவும் துறை "பதவி உயர்வு குழுக்களை" அமைத்து 12-1-1994-ல் அரசு ஆணை வழங்கியது. (அரசு ஆணை எண். 15, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 12-1-1994) இம்முறை சிறந்த பயன் அளித்துள்ளது என்பதை தேர்வாணையம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றது. அதிகப்படியான பணியாளர்கள் "துறைபதவி உயர்வு குழுக்கள்" மூலம் பயன் அடைந்துள்ளார்கள். விவரம்: இணைப்பு-7 கொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவுக் கூறு 320 (3) (பி)-ன்படி அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்வதில் மேற்கொள்ளப்பட வேண்டிய நெறிமுறைகளை எடுத்துக்கூற தேர்வாணையம் கடமைப்பட்டுள்ளது. மேலும், பதவி உயர்வு மற்றும் பணிமாற்றம் மூலம் நியமனம் பெற தகுதியுடையவர்களை வரிசைப்படுத்திக் காட்டுவதிலும் தேர்வாணையம் பெரும் பங்கு வகிக்கின்றது. இவ்வாறு பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் பணி நியமனம் பெற தகுதியுடையவர்களை தெரிவு செய்வதற்கென கால வரையறைக்குள்ளான திட்டம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்காலக்கெடு சரிவர பின்பற்றப்படுவதில்லை. துறைத் தலைவர்களிடமிருந்து கருத்துருக்களைப் பெறுவதும், பெற்ற கருத்துக்களின்மீது மேலும் சில தகவல்கள் சேகரிப்பதும் கால தாமதத்தில் முடிந்தன. இஃது அரசு ஊழியர்களின் பணிமேம்பாட்டு வாய்ப்புகளைப் பெரிதும் பாதித்தது.

மாநில நல்லாட்சியின் மீது மிக்க அக்கறை கொண்டுள்ள தேர்வாணையம், மாறி வரும் போக்கினையும், வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றங்களையும் கருத்தில் கொண்டு தனது தேர்வு முறைகளையும் மாற்றியமைக்க வேண்டிய இன்றியமையாமையை உயர்ந்தது. இவ்வகையில், மற்ற மாநிலத் தேர்வாணையங்களில் நிலவி வரும் முறைகளையும், மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் பின்பற்றி வரும் முறைகளையும் ஆய்வு செய்து, அதனடிப்படையில் "துறை பதவி உயர்வு குழுமம்"

என்னும் அமைப்பினை ஏற்படுத்த முனைந்து அதற்கான ஆணையையும், தமிழக அரசிடமிருந்து பெற்றது. இக்குழுமம் இயங்குவதற்கான ஆண்டு அட்டவணையும் முடிவு செய்து அதன்படி நடைமுறைகள் செயல்பட்டு வருகின்றன.

புதிய செயல் முறைப்படி, அரசு தலைமைச் செயலகத் துறை உரிய முன்மொழிவினை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைக்கின்றது. இத்தகு முன்மொழிவுகளில் உள்ள குறைபாடுகள் உரிய அலுவலர்களே தங்களுக்கிடையே கலந்து பேசுவதின் மூலம் சரிசெய்யப்படுகின்றன. மேல்மட்டத்தில் முடிவு செய்யவேண்டிய பிரச்சனைகள் துறைக் குழுமக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்படுகின்றன. துறைக் குழுமக் கூட்டத்தின் பரிந்துரைகள், அதாவது பரிந்துரை செய்யப்பட்ட பணி அலுவலர்களின் பெயர் அடங்கிய பட்டியல் உடனடியாக தயார் செய்யப்பட்டு குழுமத்தின் ஒப்புதல் பெறப்படுகின்றது. இப்பரிந்துரை குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டு அரசு ஆணைகளும் விரைந்து பிறப்பிக்கப்படுவதால் முந்தைய முறையில் நிலவி வந்த காலங்கடத்தும் கடிதத் தொடர்பு முறை முடிவுக்கு வந்துள்ளது.

புதிய செயல்முறையின் நோக்கமே கால தாமதத்தை தவிர்ப்பதாகும். கடந்த ஒன்பது மாத காலத்தில் 2820 அலுவலர்கள் துறைக் குழுமக்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நோக்கம் வெற்றி பெற்றுள்ளதை எடுத்துக்காட்டுகிறது. இக்கால கட்டத்தில் 46 குழுமக் கூட்டங்கள் நடந்துள்ளன. கீழே தரப்பட்டுள்ள சில விவரங்கள் இக்குழுமம் அமையப் பெற்றதின் விளைவுப் பயனை பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் எடுத்துக்காட்டுகின்றன.

வரிசை எண். (1)	பதவிப் பெயர் (2)	பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை. (3)
1.	தமிழ்நாடு குடிமைப் பணியில் துணை ஆட்சியம்	616
2.	தமிழ்நாடு காவல் பணியில் காவல்துறை துணை கண்காணிப்பாளர்	224
3.	தமிழ்நாடு வேளாண் விரிவாக்கப் பணியில் வேளாண் துணை இயக்குநர் (விரிவாக்கம்)	268
4.	தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித்துறையில் வட்டார வளர்ச்சி அலுவலர்	472
5.	தமிழ்நாடு வேளாண் பொறியியல் துறையில் உதவி செயற் பொறியாளர்	110
6.	தமிழ்நாடு கூட்டுறவுத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை பதிவாளர்	90
7.	தமிழ்நாடு நில அளவை மற்றும் நில பதிவுருக்கள் துறையில் துணை இயக்குநர்	78
8.	தமிழ்நாடு பொதுப் பணியில் குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர்	77
9.	போக்குவரத்து பணியில் வட்டார போக்குவரத்து அலுவலர்	72

புதிய செயல்முறைப்படி, தற்காலிக பெயர் பட்டியல் தயாரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் துறை தோறும் கிடப்பில் இருந்த அத்தனை பெயர் பட்டியல்களையும் முடிவு செய்ததோடு முறையான பெயர் பட்டியல் தயாரிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாயிற்று. பத்து ஆண்டுகளுக்கு மேலும் கிடப்பில் இருந்த பட்டியல்கள் உதாரணமாக, தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சி துறையில் வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிக்கு 1980-81-லிருந்தும், தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவுப் பணியில் உதவி இயக்குநர் பதவிக்கு 1981-82-லிருந்தும், தமிழ்நாடு நில அளவை மற்றும் நில பதிவுருக்கள் துறையில் உதவி இயக்குநர் பதவிக்கு 1985-86-லிருந்தும், கணிப்பாய்வு மற்றும் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கு 1984-85-லிருந்தும், தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணியில், நகராட்சி ஆணையர் நிலை-மூன்று பதவிக்கு 1983-84-லிருந்தும்-அனைத்தும் முடிவெடுக்கப்பட்டு நடப்பாண்டு பெயர் பட்டியல் அமுலாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இஃது அரசு ஊழியர்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். பழைய முறையில் துறைத் தலைவர் அரசுக்கு அனுப்பி வைக்கும் கருத்துருவின்படி தற்காலிக பெயர்ப்பட்டியல்கள் தயாரிக்கப்பட்டன. இத்தற்காலிக பெயர் பட்டியலைக் கொண்டே துறை தோறும் ஏற்படும் உடனடி பணியாளர் நியமனத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டமையால், தேர்வாணையத்தின்

ஆலோசனையோடு தயாரிக்கும் நிரந்தர பெயர்ப் பட்டியல் தன் முக்கியத்துவத்தை இழந்தது. ஊழியர்களிடையேயும் தங்கள் பெயர் நிரந்தரப் பட்டியலில் இடம் பெறுமா என்ற உறுதியற்ற எண்ணம் தோன்ற ஏதுவானது. புதிய முறையில் நிரந்தர பட்டியல் நேரடியாகவே தயாராவதால் இத்தகு உறுதியற்ற எண்ணம் தோன்ற வாய்ப்பில்லை

4. மேம்பட்ட வசதிகள் செய்து கொடுத்தலை குறித்து:

(1) தேர்வாணைய உறுப்பினர்களுக்கு இந்திய அரசியல் அமைபபு சட்டப்படி வழங்கப்பட்டுள்ள அந்தஸ்தைக் கருத்தில் கொண்டு உறுப்பினர் அவாகளின் அலுவல் அறைகளுக்கு குளு குளு வசதி செய்வதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பபபட்டு அரசும் நிதியாண்டு 1995-96-ல் பார்ட் II-திட்டத்தில் இது நிறைவேற்றப்படலாம் என முடிவெடுத்துள்ளது.

(2) தேர்வாணைய அலுவலகத்தில் தற்போது இயக்கத்தில் உள்ள கணிபொறி 1988-ம் ஆண்டு கணிபொறி பராமரிப்பு கழகத்தால் (C.M.C.) நிறுவப்பட்டது. இக்கணிப்பொறி தன் ஆயுட்காலத்தைக் கடந்ததோடு வளர்ந்து வரும் அறிவியல் உலகிற்று உகந்ததாக இல்லை. இதன் பயன்பாடு மிகவும் குறுகிய வட்டத்திற்குள்ளானது. முன் தேர்வுப் பணிகளுககு மட்டுமே இதனை பயன்படுத்த இயலும். கணிப்பொறியின் பயனை பின் தேர்வுப் பணிகளுக்கும், கொள்குறி வினாவிடைத் தாட்களை திருததும் பணி மற்றும் விண்ணப்ப படிவங்களை (O.M.R.)-யுக்தி மூலம் சரிபார்க்கும் பணிகளுக்கும் விரிவாக்க எண்ணம் கொண்டு நவீன கணிபொறி ஒன்றினை வாங்கிட தேர்வாணையம் விரும்பியது. அரசும இதற்காக ரூபாய் 45 லடசம் வழங்கியுள்ளது.

(3) தேர்வாணையம் தன் ஊழியர்களின் ஊதிய விகிதங்களை மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைய ஊழியர்கள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணியாளர் ஊதிய விகிதங்களுக்கு இணையாக மாற்றி அமைத்துத் தருமாறு அரசினை வேண்டியது. அரசும் இதனை கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டது. இவ்வகையில் தேர்வாணைய ஊழியர் பணியினை தனித்தன்மை வாய்ந்த பணியாக எடுத்துக் காட்டும் வகையில் பணிவிதிகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றது.

(4) வளர்ந்து வரும் வேலைப்பளு, நவீன அலுவலகச் சாதனங்களை வசதியாக பொருத்தி இயக்குதல், அதிக வேலைபபளு காலத்தில் தனியார் கட்டிடங்களை வாடகைக்கு எடுப்பதை தவிர்த்தல் ஆகியன கருதி தேர்வாணையம் தன் வளாகத்தில் ஐந்து மாடி கட்டிடம் ஒன்றினை கட்டுவதறகான திட்டத்தினை அரசுக்கு அனுப்பிவைத்தது. அரசும் இக்கட்டிட கடைக்கால் போடும் பணிக்காக ரூபாய் 110 லட்சம் அளவில் அனுமதித்துள்ளது.

(5) அலுவலக வளாகத்தில நிறுவப்பட்டிருந்த மனித இயககி தொலைபேசி சாதனத்தை மாற்றி மின் அணுவியல் தானியங்கி தொலைபேசி சாதனம் பொருத்தப்பட்டுள்ளது. இதனால் உள்வளாக செய்திப் பரிமாற்ற வசதி மேம்படுவதுடன், வெளிப்புற செய்திப் பரிமாற்ற வசிதிகளும் ஏற்பட்டுள்ளன. அரசு இதறகாக ரூ. 2.72 இலடசம் வழஙகியுளளது.

(6) இடையே இடையே ஏற்பட்டு வரும் மின்தடை; கணிப்பொறி இயக்கத்திற்கு தடையாக இருப்பதோடு நீண்ட நேர மின்தடை கணிப்பொறியின் நினைவுப்பகுதி பதிவுகளுக்கு மீளா இழப்பு ஏற்படவும காரணமாயிருப்பதுண்டு. இத்தகு இழப்பு ஏற்படாமலிருக்க தேர்வாணைய அலுவலக கணிப்பொறி வளாகததிற்கு தடையில்லா மின் இணைப்பு வழங்கவும், மின் ஆக்கி சாதனம் ஒன்றைப் பொருத்தவும், திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. அரசு இவவகையில் ரூ. 2.75 இலட்சம் வழங்கியுள்ளது. இவவசதி, எதிர்காலத்தில் நிறுவப்படவுள்ள நவீன கணிப்பொறி இயக்கத்திற்கும் உத்திரவாதம தரும்.

5. பணித்தன்மையின் அடிப்படையில் அலுவலக பணியினை மாற்றியமைத்தல்:

உறுபபினர் திரு. ஜெ. இராமலிஙகம் அவர்கள் தலைமையிலான குழு, நேரடி பணித்தேர்வு தொடர்பான பணியினை மேமபடுத்துவதற்காக சில வழிமுறைகளை பரிந்துரை செய்தது. அவைகளில் பணிததன்மையின் அடிப்படையில் அலுவலகத்தைப் பல பரிவுகளாகப் பிரித்து மாற்றியமைத்தல், நவீன கம்ப்யூட்டர் முறையைப் புகுத்துதல், தேர்வுப் பிரிவில் புதிய முறைகளை கையாளுதல் போன்றவை அடஙகும். இவற்றினால் தேர்வு முறையில் ஏற்படும் காலதாமதத்தினை முடிந்தவரையில் குறைக்கலாம் என தேர்வாணையம் கருதியதால் மேற்பட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அலுவலக அமைப்பினை 01-01-95 முதல் மாற்றியமைத்து பணிகள் நடந்துவருகின்றன.

6. இட ஒதுக்கீட்டுக்கொள்கை—இனவாரி சுழற்றி—வேலை முறைப்பட்டியல்:

பல்வேறு அரசு ஆணைகளில் கூறப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டுக் கொள்கையின் உண்மையான கருத்தினை பிரதிபலிக்கும விதத்தில், தேர்வாணையம் மிகவும் கவனமாக ஆய்வு செய்து 100 இடங்களுக்கான வேலை முறைப்பட்டியலை வடிவமைத்து, அதனை அரசின் பரிசீலனைக்கும் தற்போதுள்ள வேலை முறைப்பட்டியலை மாற்றியமைக்கவும் அரசுக்கு 20-12-1994 அன்று கருத்துரு அனுப்பியது. இது தொடர்பான அரசு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. (அரசு க. எண். 97820/ஆர்/ 94-3, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, நாள் 17-02-1995.

7. (அ) வினாவங்கி: தேர்வாணையம் 25 பாடங்களில் கொள்குறி வினா வங்கியை நிறுவும் பொருட்டு பல்வேறு வல்லுநர்களிடமிருந்து வினாக்களை சேகரித்து வைத்துள்ளது இந்த வினா வங்கி எதிர்காலத்தில் வினாதாட்கள் அமைக்க பயன்படுத்தப்படும் இவ்வினா வங்கி முறையை சீர்ப்படுததி நிலையான ஒன்றாக கொண்டுவர முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஓ.எம்.ஆர். விண்ணப்பப் படிவம்: ஓ.எம்.ஆர். கணிப்பொறி விண்ணப்பப் படிவம் வரும் தொகுதி ஒன்று பணியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஓ.எம்.ஆர் படிவத்தில் உள்ள விவரஙகளை குறியீடு முறையில் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். கொடுக்கப்பட்ட விவரத்தை கணிப்பொறியில் பதிவு செய்து வேண்டிய விவரஙகளை எளிதில் பெறலாம். இதனால் கால விரயம் தவிர்க்கப்படும, என நம்பலாம்.

(இ) எழுத்துத் தேர்வு குறிப்பிடுதல்: ஒவ்வொரு பதவிக்கும விளம்பரம் கொடுக்கும்போது அப்பதவிக்கு எந்த மாதம் எழுத்துத் தேர்வு நடத்தப்படும் என்ற விவரமும் கொடுக்கப்படுகிறது. இதனால் விண்ணப்பதாரகள் முன்கூட்டியே முறையாக எழுத்துத் தேர்விற்கு தயார் செய்துகொள்ள முடியும்.

(ஈ) விண்ணப்பம் பெற்றதற்கான ஒப்புகை அளித்தல்: விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை நேரடியாக தேர்வாணைய அலுவலகத்தில் அளிக்கும்போது அதறகான ஒப்புகை சீட்டினை உடனடியாக வழங்க ஆணையிடப்பட்டு அமுல் செய்யப்படுகின்றது.

(உ) தேர்வுகள் கண்காணிப்பு: எழுத்துத் தேர்வுகள் நடப்பதை நேரடியாக கண்ணுற்று உரிய கட்டுப்பாடுகளை கொள்ளும் பொருட்டு தேர்வாணைய அலுவலர்களே தேர்வு மையங்களைப் பார்வையிடவேண்டுமென தேர்வாணையம் ஆணையிட்டு அவ்வாணை செயல்படுத்தப்படுகின்றது.

பகுதி-7.

தேர்வாணைய கருத்தை அரசு ஏற்காமை:

அறிவிக்கைக்குரிய ஆண்டில் அரசு தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து 3 வழக்கில் மாறுபட்டுள்ளது:

அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் எந்த வழக்கிலும். செயல்படவில்லை. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாக தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி ஆணையிடடுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. இப்பொருள் குறித்த ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு 11-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

1. அரசு கடித எண் 32648/யு/94-2, ப. மற்றும் நி. துறை, நாள் 21-03-1995.

திரு. கே. இராஜேந்திரன் என்பவர் 1977-ஆம் ஆண்டு தேர்வாணையம் நடத்திய உதவியாளர் பதிவிக்கான சிறப்புத் தேர்விற்கு விண்ணப்பிதது இருந்தார். அவர் விண்ணப்பத்தில் பழங்குடியினர் வகுப்பில் கொண்டா ரெட்டி என்னும் வகுப்பைச் சார்ந்தவர் என துறையூர் வட்டாட்சியரிடம் (திருச்சி மாவட்டம்) சான்றிதழ் வாங்கி அனுப்பியிருந்தார். அவர் அத்தேர்வில் உதவியாளராக பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்டு தலைமை செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. தேர்வாணையம் அவருடைய சாதி சம்பந்தமாக விசாரணை செய்து உண்மை நிலையை அனுப்பும்படி திருச்சி மாவட்டாச்சியரைக் கேட்டுக் கொண்டது. மாவட்டாச்சியர் விசாரணை செய்து அன்னார் "கொண்டா ரெட்டி" என்னும் வகுப்பைச் சார்ந்தவர் அல்ல என்றும்,

"ரெட்டி" என்ற உயர் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், துறையூர் வட்டாச்சியர் 27-9-1977 அன்று வழங்கிய சாதிச் சான்றிதழ் பொய்யானது எனவும் தெரிவித்தார்.

திரு. இராஜேந்திரன் (தற்போது உதவி பிரிவு அலுவலர், பொது எல் மற்றும் ஓ துறை) பொய்யான சாதிச் சான்றிதழ் வாங்கி தனித்தேர்வில் 1977-ஆம் ஆண்டு அனுமதி பெற்று தெரிவு பெற்றுள்ளார் என்ற குற்றம் கண்டறியப்பட்டதால், தேர்வாணையம் அவரின் தெரிவினை நீக்கியது. மேலும், தேர்வாணையம் அன்னாரை பணிநீக்கம் செய்யும்படியும் அரசுக்கு தெரிவித்தது. அன்னார்மீது ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் குற்றவியல் வழக்கு தொடரவும், அரசுக்கு பரிந்துரை செய்தது. அரசு அன்னார் மீது குற்றவியல் வழக்கு தொடராமல் அன்னார்மீது ஒழுங்கு நடவடிக்கை மட்டும் எடுத்து மூன்றாண்டுக்கான தொடர் சம்பள உயர்வை நிறுத்தச் செய்து ஆணை வழங்கியது. தேர்வாணையம் இதனை ஏற்காமல், மறுபடியும் அன்னார்மீது குற்றவியல் வழக்கு தொடரவும், அன்னாரை பணியிலிருந்து நீக்கவும் பரிந்துரை செய்தது. அரசு அன்னாருக்கு கொடுத்துள்ள தண்டனை மூன்றாண்டு தொடர் சம்பள உயர்வே போதுமானது எனவும் அவர் பணியில் சேர்ந்து அதிக நாட்கள் கடந்துவிட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் அவசியம் இல்லை எனக் கருதுவதாகவும் கூறியுள்ளது. இவ்வாறு அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு சென்றுள்ளது.

2. அரசாணை எண். 3-டி, 109 பொதுப்பணித்துறை, நாள் 30-6-1994.

உதவி நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித்துறை, மதுராந்தகம் உட்கோட்டம் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஆவணங்களை அரசு நவம்பர் திங்கள் 1993-ம் ஆண்டு அனுப்பி வைத்து, அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட வேண்டிய ஆணை குறித்து தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

உதவி நிர்வாகப் பொறியாளர், செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் உட்கோட்டத்தில் பணிபுரிந்த போது அன்னார் மீது கூறப்பட்ட ஊழல் மற்றும் ஒழுங்கீனச் செயல் சம்பந்தப்பட்ட சாட்டுரைகளை விசாரித்த தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித்துறை, குற்றஞ்சாட்டப்பட்டவரின் பணிகளில் பல முறைகேடுகளைக் கண்டறிந்து, அதாவது சரிபார்ப்பு அளவுகள் மற்றும் தண்டு நீக்குதல் சான்றிதழ்களில் தேதியுடன்கூடிய கையொப்பமிடாமை, ஆகியவைகளுக்காக அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர ஆணை வழங்கியதற்கிணங்க, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, செங்கற்பட்டு மாவட்டம் இருப்பு காஞ்சிபுரம் தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(ஆ)-வின் படி ஐந்து குற்றச்சாட்டுகளைச் சுமத்தி விளக்கம் கோரினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது விளக்கத்தை அளித்து குற்றச்சாட்டுக்களை மறுத்தார். வினாப்படிவத்தில் வாழ்மொழி மற்றும் நேரடிக்கேட்பு விசாரணை தேவை எனக் கோரினார். விசாரணை அலுவலர் முறையாக நடைமுறைகளை பின்பற்றி விசாரணை நடத்தி குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட ஐந்து குற்றஞ்சாட்டுகளில் குற்றச்சாட்டுக்கள் 1, 2 மற்றும் 5 ஆகியவை நிரூபணமானதாக அறிக்கை அளித்தார். தலைமைப் பொறியாளர் (பொது) வழக்குத் தொடர்பான ஆவணங்களை, தனது குறிப்புரையுடன் அனுப்பி வைத்தார். இவ்வழக்கை ஆய்வு செய்த அரசு குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட ஐந்து குற்றஞ்சாட்டுக்களும் நிரூபணமானதாக முடிவு செய்து அதன் விவரத்தை குறிப்பாணை மூலம் விசாரணை அறிக்கையின் நகலொன்றை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அனுப்பிவைத்து அதன்மீதும் மற்றும் அரசின் முடிவின் மீதும் அன்னாரின் முறையீட்டை அளிக்கும்படி அறிவுறுத்தியது. அவ்வாறே குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது முறையீட்டை அளித்தார். அரசு இவ்வழக்கைச் சம்பந்தப்பட்ட ஆவணங்களை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அவ்வழக்கில் பிறப்பிக்க வேண்டிய ஆணை குறித்து ஆலோசனை கோரியதில், தேர்வாணையம் நிரூபனமான குற்றச்சாட்டுகளுக்கு அன்னாரின் ஊதிய உயர்வை மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கலாம் என்று தனது ஆலோசனை வழங்கியதுடன், குற்றஞ்சாட்டப்பட்டார் பணி முதிர்ச்சி காரணமாக 30-6-1994 அன்று ஓய்வு பெற இருப்பதால், தண்டனைக்குச் சமமானத் தொகையை பிடித்தம் செய்யும்படியும் தனது ஆலோசனையை வழங்கியது. ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கு மாறாக அரசாணை 3-டி எண். 109, பொதுப் பணித்துறை, நாள் 30-6-1994-ன் மூலம் குற்றச்சாட்டுக்கள் வலியுறுத்தப்படவில்லை எனத் தெரிவித்து தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளது. அரசு தனது ஆணையில் நிரூபணமான ஐந்து குற்றச்சாட்டுக்களும் சரிபார்ப்பு அளவுகள் மற்றும் தண்டு நீக்குதல் சான்றிதழ்களில் குற்றஞ்சாட்டப்பட்டவர் பரிசீலித்த தேதிகளில் காணப்படும் முரண்பாடுகள் என்றும் அதனால் அரசுக்கு பணம் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் அதனால் கனிவு நோக்குடன் அன்னார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை வலியுறுத்தாமல் தள்ளுபடி செய்வதாக தெரிவித்துள்ளது.

3. அரசாணை எண். 169/ஆர்.டி. மற்றும் எல்.ஏ. துறை, நாள் 13-4-1994 மற்றும் அரசாணை எண். 170/ஆர்.டி. மற்றும் எல்.ஏ. துறை, நாள் 13-4-1994.

ஜனவரி 91-ல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளின் பேரில் தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியிருந்தது.

மதுரை மேற்கு பஞ்சாயத்து ஒன்றியத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்களாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் முன்னவர் 1-3-1980 முதல் 2-5-1983 வரையிலும் மற்றவர் 17-6-1980 முதல் 2-5-1983 வரையிலும் பணியாற்றினார். அச்சமயம் அவர்களுக்கு எதிராகப் பெறப்பட்ட புகார்கள் மீது தகுதியுடைய அதிகாரிகளால் விசாரணை நடத்தப்பட்டது. 125 வாட் பாதரச ஆவி விளக்குகள் வாங்கியதில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும், குற்றஞ்சாட்டப்பட்ட முதலாமவர் ரூ. 18,186.85-க்கும் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாமவர் ரூ. 2002.20-க்கும் மற்றும் வேறொரு நிகழ்வில் இருவரும் சேர்ந்து ரூ. 3,337-க்கும் அதிகப்படியான பணம் கொடுத்தது அரசாணை எண். 2072, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 27-12-1977-ல் உள்ள ஆணைக்கு மாறானது என்ற குற்றச்சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்தொகைகளை அவர்களிடமிருந்து பிடித்தம் செய்வதோடு உரிய தண்டனையும் அளிக்கப்படவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அவர்கள்மீது தமிழ்நாடு குடிமுறைப்பணிகள் (வகைப்பாடு) கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி 17(ஆ)-ன்கீழ் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டன. நிர்ணயிக்கப்பட்ட விதிகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளன. இருவரும் முறையே ரூ. 19,855.35 மற்றும் 3,670.70-ம் அரசுக்கு இழப்பு ஏற்படக் காரணமாக இருந்துள்ளனர் என்றும் குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகியுள்ளதாகவும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் இறுதி ஆணைக்காக இந்நேர்வு அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு தேர்வாணையத்தின் கருத்தினை இவ்வழக்கின் மீது அரசு கோரியது. மேற்படி விதி அரசுக்கு இழப்பு ஏற்படுத்திய தொகையை குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து வசூல் செய்வது சம்பந்தப்பட்டதாகும். இந்நேர்வை பரிசீலனை செய்த தேர்வாணையம் ரூ. 19,855.35-ஐ குற்றஞ்சாட்டப்பட்ட முதலாமவரிடமிருந்தும், ரூ. 3,670.70-ஐ குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாமவரிடமிருந்தும் பிடித்தம் செய்யலாம் என அரசுக்கு தனது ஆலோசனையை அளித்தது.

தேர்வாணையை ஆலோசனையை ஏற்று அரசாணை நிலை எண். 169 மற்றும் 170, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் 13-4-1994-ல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து மேற்படி இழப்புத் தொகைகளை பிடித்தம் செய்ய அரசு ஆணையிட்டது. மேலும் தேர்வாணையம் அளித்த ஆலோசனைக்கும் கூடுதலாக அவர்களின் ஊதிய உயர்வுகள் திரண்ட பயனின்றி இரண்டாண்டு காலத்திற்கு நிறுத்தம் செய்யும் தண்டனையையும் அளித்து ஆணை வெளியிட்டுள்ளது. மேற்படி தண்டனையை வழங்குமுன் தேர்வாணையத்தின் ஆலோசனையை அரசு பெறவில்லை, எனினும் இவ்வழக்கில் தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நன்கு ஆய்வு செய்த பின்னரே தேர்வாணையம் தனது கருத்தினை வழங்கிய நிலையில், அரசு தன்னிச்சையாக ஊதிய உயர்வு நிறுத்தத்தண்டனையை தேர்வாணையம் அளித்த ஆலோசனையின் பேரில் அரசுக்கு ஏற்பட்ட இழப்பினை பிடித்தம் செய்யும் தண்டனையுடன் சேர்த்து அளித்துள்ளது சரியானது அல்ல.

ஒப்புகை

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்கு போதிய இடவசதி செய்து கொடுத்து, மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு பொறுப்பாட்சிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறது.

மாநில அரசின்கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் தேர்வாணையத்தின் அழைப்பினை தயாராக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பாராமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்கள் மற்றும் ஆலோசனை வழங்கிய வல்லுநர்கள் ஆகியோருக்கு இத்தேர்வாணையம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய வேட்பாளர்களை பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்டுள்ள துறைத் தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு துறை அரசு செயலாளர்களுக்கும், துறை தலைவர்களுக்கும் தேர்வாணையம் தன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

முடிவாக ஆண்டு முழுவதும் உண்மையாகவும் மற்றும் திறமையுடனும் பணிபுரிந்த அதனுடைய ஊழியர்களுக்கு தேர்வாணையம் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

திரு. சூ.ர. கருப்பண்ணன், இ.ஆ.ப. (ஓய்வு)	..	தலைவர்
திரு. சா. அமீது, எம.ஏ.	..	உறுப்பினர்
திரு. ஜி. செல்வகணபதி, எம்.ஏ.	..	உறுப்பினர்
திருமதி கோ. நாயகம், எம்.ஏ., எம்.பில்.	..	உறுப்பினர்
டாக்டர் எம். எஸ். இராமச்சந்திரன், எம்.பி.பி.எஸ்., எம்.டி. (மருத்துவம்)	..	உறுப்பினர்
திரு. சி. செல்லப்பன், இ.ஆ.ப. (ஓய்வு)	.	உறுப்பினர்

ஏ. தசரதன், இ.ஆ.ப.,
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-2.

நாள்: 23-6-1995.

பின் இணைப்பு 1.

(தொடர்பு பகுதி 1.)

31-3-1995-இல் உள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல்.

1.	துணைச் செயலாளர்	4
2.	சார் செயலாளர்	23
3.	கணக்கு அலுவலர்	1
4.	உதவி கணக்கு அலுவலர்	1
5.	ஆராய்ச்சி அலுவலர்	1
6.	நூலகர்	1
7.	ஆராயச்சி உதவியாளர்	2
8.	கண்காணிப்பாளர்	71
9.	உள்ளீடு, வேலை அளவு கண்காணிப்பாளர்	1
10.	உள்ளீடு, வேலை அளவு இயககுபவர் (கணிப்பொறி)	1
11.	அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர்கள் (கணிப்பொறி)	8
12.	கணக்கர்	26
13	உதவியாளர்	146
14.	சுருக்கெழுத்துத் தட்டச்சர்	11
15.	தொலைபேசி இயக்குபவர்	2
16.	இளநிலை உதவியாளர்	130
17.	தட்டச்சர்	40
18.	ஊர்தி ஓட்டுநர்	10
19.	பதிவு எழுத்தர்	45
20.	மின் தூக்கி இயக்குபவர்	1
21.	படி பெருக்கி இயக்குபவர்	1
22.	முதன்மை ஏவலர்	1
23.	அலுவலக உதவியாளர்	56
24.	காவலர்	6
25.	பெருக்குபவர்	4
26.	துப்புரவு பணியாளர்	2
27.	குடிநீர் வைப்பவர்	1

பின் இணைப்பு-II

(தொடர்பு பகுதி-II)

நேரடி தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் பற்றிய விவரம் — 1994-95

வரிசை எண்	பதவி மற்றும் துறையின் பெயர்	விண்ணப்பம பெற கடைசி நாள்.	தேர்வு முடிவு-கள் தெரிவிக்கப் பட்ட நாள்	காலியிடங்களின் எண்ணிக்கை						பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை						முதல் நிலைத் தேர்வில் கலந்து கொணடவர்கள்						இறுதித் தேர்வில் கலந்து கொண்டவர்கள்						வாய்மொழித் தேர்வில் கலந்து கொணடவர்கள்						தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள்						தெரிவு பெற்றவர்களின் கல்வித் தகுதி.	குறிப்பு
				ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்	ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்	ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்	ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்	ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்	ஆதி	பழ	மி.பி.வ	பி.வ.	ப.போ	கூடுதல்		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)	(29)	(30)	(31)	(32)	(33)	(34)	(35)	(36)	(37)	(38)	(39)	(40)	(41)	(42)
1	புள்ளியியல் உதவி இயக்குநர் புள்ளியியல் துறை	4-4-93	26-4-95	1(1)	-	1(1)	1(1)	2	5(3)	39	-	49	166	19	273	-	-	-	-	-	-	4	-	7	23	-	34	3(1)	-	3(1)	5(3)	4	15(5)	1(1)	-	1	1(1)	-	3(2)	எம்.எஸ்.சி-1, எம்.ஏ.,எம்.பில்-1, எம்.ஏ.-1	இரண்டு காலியிடங்கள் உயர்நீதி மன்றத்தின் ஆணைக்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
2.	வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்கப் பணி.	19-7-93	11-5-94	23	-	-	-	-	23	335	-	-	-	-	335	-	-	-	-	-	-	133	-	-	-	-	133	44	-	-	-	-	44	23	-	-	-	-	23	எம்.எஸ்.சி.(வேளாண்)-3, பி.எஸ்.சி(வேளாண்)-20	--
3.	உதவி வேளாண்மை வேதியியலர் தமிழ்நாடு வேளாண்மைப் பணி.	2-9-91	3-6-94	1	-	-	-	-	1	17	-	-	-	-	17	-	-	-	-	-	-	2	-	-	-	-	2	2	-	-	-	-	2	1	-	-	-	-	1	எம்.எஸ்.சி.(வேளாண்)-1	--
4	குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர், தமிழ்நாடு சமூக நலத்துறை.	22-3-93	4-7-94	3(3)	-	3(3)	5(5)	7(7)	18(18)	59	-	162	256	76	553	-	-	-	-	-	-	44	-	126	196	61	427	10	-	12	23	7	52	3(3)	-	3(3)	7(7)	5(5)	18(18)	எம்.எஸ்.சி., எம்.பில்-2, எம்.எஸ்.சி.,(சத்துணவு) எம்.பில்-1, பி.எஸ்.சி., (சத்துணவு மற்றும் உணவு கட்டுப்பாடு)-7, பி.எஸ்.சி. (சத்துணவு நிர்வாகம் மற்றும் உணவுக் கட்டுப்பாடு)-2, பி.எஸ்.சி-3, பி.எஸ்.சி. மற்றும் எம்.ஏ., (சமூகவியல்)-2, பி.எஸ்.சி. மற்றும் முதுநிலை பட்டயம் செயல்முறை சத்துணவு மற்றும் உணவு கட்டுப்பாடு-1.	இரண்டு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பகிரங்கப் போட்டியில் தெரிவு பெற்றனர்.
